அறந்தாங்கி அருகே

அடுத்தடுத்து 10 கடைகளில் தீ விபத்து

ரூ.பல லட்சம் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து சேதம்

அறந்தாங்கி, செப். 4–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா மீமிசல் கிழக்கு கடற்கரை சாலையில் பேருந்து நிலையம் அருகில் சுமார் 10–க்கும் மேற்பட்ட மளிகை கடை பேன்சி ஸ்டோர் செ ருப்பு கடை பழக்கடை செல்போன் கடை போன்ற பல்வேறு கடைகள் இயங்கி வந்தன

இந்நிலையில் இன்று விடியற்காலை 3 மணி அளவில் திடீரென்று ஒரு கடையில் தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ அருகில் உள்ள கடைகளில் அடுத்தடுத்து பரவி 10 கடைகளுக்கு தீ பிடித்து மளமளவென்று எரிந்தது.

தீ பரவியதை கண்டு அக்கம் பக்கத்தினர் பார்த்து அதிர்ச்சி அடைந்து தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதையடுத்து தகவல் அறிந்த ஜெகதாபட்டினம் தீயணைப்பு துறையினர் அங்கு சென்று சுமார் 1 மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனால் தீ விபத்தில் கடைகள் அனைத்தும் சேதமானது. இந்த தீ விபத்து குறித்து மீமிசல் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து மின்கசிவுனால் ஏற்பட்டதா அல்லது சமூக விரோதிகள் யாரேனும் தீ வைத்தனரா என்ற கோணத்தில் தீவிர விசாரணை செய்து வருகின்றனர்

இங்கு கடை வைத்திருந்த அனைத்து தரப்பினரும் அங்கு வந்து கண்ணீர் விட்டு கதறினர் இந்த தீ விபத்தால் மீமிசல் கடை வீதி சோகத்தில் மூழ்கியுள்ளது.

திண்டுக்கல் அருகே குடிசை வீடு எரிந்தது

மகள் திருமணத்துக்காக சேமித்த ரூ.2 லட்சம், 10 கிராம் நகை எரிந்து நாசம்

விவசாயி வேதனை

திண்டுக்கல்,செப்.4

திண்டுகக்ல் மாவட்டம், சாணார்பட்டி அருகேயுள்ள அஞ்சுகுழிப்பட்டியைச் சேர்ந்த நாகமலை (50) விவசாயக் கூலித் தொழிலாளியாக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு மனைவி மற்றும் 4 மகள்கள் உள்ளனர். இதில் ஒரு மகளுக்குத் திருமணமாகி விட்ட நிலையில், மற்றொரு மகளுக்குத் திருமணம் நிச்சயிக்கப்ப ட்டுள்ளது. மேலும், இரு மகள்கள் படித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நாகமலை வேலைக்குச் சென்றிருந்தபோது அவரது குடிசை வீட்டில் திடீரென தீப்பிடித்தது. அப்போது வீட்டில் இருந்த சமையல் எரிவாயு உருளை பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து தீ வேகமாகப் பரவி குடிசை வீடு முழுவதுமாக எரிந்து சேதமடைந்தது.

மேலும், அருகில் இருந்த மற்றொரு வீட்டுக்கும் தீ பரவியதில் அந்த வீடும் சேதமடைந்தது. இந்த விபத்தில் வீட்டில் இருந்த பீரோவில் வைக்கப்பட்டிருந்த ரூ.2 லட்சம் ரொக்கம், 10 கிராம் தங்க நகை, பீரோ, கட்டில், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருள்கள் எரிந்து சேதமடைந்தன. வீட்டின் அருகே நிறுத்தப்பட்டிருந்த நாகமலையின் இருசக்கர வாகனம் மற்றும் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவரின் இருசக்கர வாகனம் தீயில் எரிந்து சேதமடைந்தன.

தகவலறிந்த அக்கம்பக்கத்தினர் தண்ணீரை ஊற்றி தீ மேலும் பரவாமல் அணைத்தனர். உடனடியாக தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால், சுற்றுப்புறங்களில் ஏராளமான வீடுகள் இருந்த நிலையில் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படும் நிலையில், சம்பவம் குறித்து சாணார்பட்டி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வரத்துக்குறைவால்

வெங்காயம் விலை உயர்வு

திண்டுக்கல் செப்.4

மழை இல்லாத காரணத்தினால் இனி வெங்காயத்தின் விலை குறைய வாய்ப்பில்லை என்று வியாபாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்

திண்டுக்கல் கரூர் பைபாஸ் சாலையில் தமிழகத்தில் இரண்டாவது பெரிய வெங்காய மார்க்கெட் செயல்பட்டு வருகிறது.

இங்கிருந்துகேரளா, ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு இலங்கை, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு வெங்காயம் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

சின்ன வெங்காயம் திண்டுக்கல் அருகே உள்ள கள்ளிமந்தயம் ஒட்டன்சத்திரம் தாராபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் விளைவிக்கப்படுகிறது.

இங்கு விளைவிக்க ப்படும் வெங்காயம் திண்டுக்கல் ஒருங்கிணைந்த வெங்காய மார்க்கெட்டிற்கு கொண்டுவரப்பட்டு தமிழக மற்றும் பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

இதற்கிடையே போதிய மழை இல்லாத காரணத்தினால் உள்ளூர் வெங்காய வரத்து முற்றிலும் தடைபட்டுவிட்டது

உடுமலைப்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் விளையும் சின்ன வெங்காயத்தை நேரடியாக வியாபாரிகளிடம் விலையும் இடத்திலேயே வாங்கி விடுவதால் திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு வரத்து பல மடங்கு குறைந்துவிட்டது.

50 கிலோ எடை கொண்ட 5000 பைகள் சராசரியாக வரும் நிலையில் தற்போது ஆயிரம் முதல் 1200 பைகள் மட்டுமே விற்பனைக்கு வருகிறது .

இதனால் கடந்த வாரம் முதல் தர வெங்காயம் கிலோ ரூபாய் 50க்கு விற்கப்பட்டது .

இந்த வாரம் வரத்து குறைவின் காரணமாக

முதல் தரம் கிலோ ரூபாய் 100 க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தரத்திற்குஏற்ப10கிலோ வெங்காயம் ரூபாய் 700 முதல் 1000 வரை சில்லறை சந்தையில் விற்கப்பட்டு வருகிறது.

அதேபோல மகாராஷ்டிரா மற்றும் கர்நாடக மாநிலம்பெல்லாரியில்இருந்து வரும் பெரிய வெங்காயம் வரத்து பல மடங்கு குறைந்த காரணத்தினால் கடந்த வாரம் 10 கிலோ பை அதிகபட்ச விலை ₹500 க்கு விற்கப்பட்ட நிலையில் இந்த வாரம் ரூபாய் 700 க்கு விற்கப்பட்டு வருகிறது.

இந்த விலை தற்பொழுது குறைய வாய்ப்பில்லை என்றும் மழைப்பொழிவு வெளிமாவட்ட வரத்து அதிகரித்தால் மட்டுமே வெங்காயத்தின் விலை குறையும் என வியாபாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

திருமங்கலத்தில்

தனியார் நிறுவன ஊழியர் கொலையில் தம்பதி கைது

கைதான தம்பதி

கொலையுண்ட வாலிபர்

திருமங்கலம்,செப்.4

மதுரை மாவட்டம் பேரையூர் அருகிலுள்ள காளப்பன்பட்டியைச் சேர்ந்தவர் பாண்டித்துரை (31). தனியார் நிறுவன ஊழியர். குடும்பத்தினருடன் திருமங்கலத்தில் வசித்த அவர், நேற்று முன்தினம் இரவு திருமங்கலம் முகமது சாபுரம் 4வது தெருவில் நடந்து சென்றார். அப்போது, அப்பகுதியைச் சேர்ந்த ராஜேஷ் கண்ணன் (41),அவரது மனைவி சிந்துஜா (37) ஆகியோர் அவர்களது வீட்டின் முன் நின்றிருந்தனர். அவர்களிடம் பாண்டித்துரை தகராறில் ஈடுபட்டுள்ளார். ஆத்திரமடைந்த தம்பதி கத்தியால் குத்தி, இரும்புக் கம்பியால் தாக்கியதில் காயமடைந்த பாண்டித்துரை திருமங்கலம் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

திருமங்கலம் நகர் போலீசார் கணவன், மனைவியை கைது செய்தனர்.

திருத்தணி முருகன் கோவிலுக்கு

ரூ.48 கோடியில் மாற்று மலைப்பாதை பணிகள்

விரைவுபடுத்த பி.கே. சேகர்பாபு வலியுறுத்தல்

சென்னை, செப். 3:

திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.48 கோடி செலவில் புதிய மாற்று மலைப்பாதை அமைக்கும் திட்டத்தின் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று தமிழகச் சட்டமன்றத்தில் முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வலியுறுத்தியுள்ளார். சட்டமன்றத்தில் இதுகுறித்து அவர் பேசியதாவது: திருத்தணி கோயிலுக்கான புதிய மாற்று மலைப்பாதை அமைக்கும் திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, அரசின் நிதி ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான வனத்துறைக்குச் சொந்தமான 0.83 ஹெக்டேர் நிலத்திற்காக செலுத்த வேண்டிய ரூ.2 கோடியே 7 லட்சம் தொகையை உடனடியாகச் செலுத்திவிட்டால், டெண்டர் கோரப்பட்டு பணிகள் விரைவாகத் தொடங்க வழிவகுக்கும்.

இந்த மாற்று மலைப்பாதை பயன்பாட்டிற்கு வந்தால், ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களிலிருந்து வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருப்பதுடன், தற்போதைய மலைப்பாதையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலையும் பெருமளவில் குறைக்க முடியும். எனவே, நிலுவையில் உள்ள தொகையை உடனே செலுத்தி, டெண்டரை விரைந்து நடத்திப் பணிகளைத் தொடங்கி பக்தர்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டுவர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

திண்டுக்கல்லில்

காரின் மேற்கூரையில் இருந்து தவறி விழுந்த 50 பவுன் நகை மீட்பு

பால் வியாபாரியிடம் இருந்து நகையை போலீசார் பறிமுதல் செய்தனர்

திண்டுக்கல் செப்.4

திண்டுக்கல் பழனி சாலையில் உள்ள முருக பவனம் பகுதியைச் சேர்ந்தவர் அருண்குமார்.

இவர்கள் குடும்பத்தினர் கடந்த 30ஆம் தேதி உசிலம்பட்டியில் நடைபெற்ற தனது சகோதரி மகள் இல்ல திருமண நிகழ்ச்சிக்கு தனது காரில் சென்றனர்.

மேலும் தனது மனைவியின் 50 பவுன் தங்க நகையை திருமண மண்டபத்தில் அணிந்து கொள்வதற்காக தனது காரில் கொண்டு செல்வதற்கு வீட்டில் இருந்து எடுத்த அருண்குமார் தனது குழந்தையை காரில் உட்கார வைப்பதற்காக காரின் மேற் கூரையில் நகை பெட்டியை வைத்துள்ளார். நகை பெட்டியை காரின் மேற்கூறையின் மீது வைத்ததை அருண்குமார் மறந்து விட்டு காரினை உசிலம்பட்டி நோக்கி ஓட்டி சென்றுள்ளார்.

இவர்கள் திண்டுக்கல் பழனி பைபாஸ் சாலையில் வத்தலகுண்டு இணைப்புச் சாலையில் சென்று கொண்டிருந்த போது காரின் மேலிருந்த சிவப்பு நிற நகைப்பெட்டி தவறி சாலையில் விழுந்தது

இதனை அவ்வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த நபர் பார்த்து அந்த பெட்டியை எடுத்துச்சென்றுவிட்டார்.

இதற்கிடையே வத்தலகுண்டு சாலையில் செம்பட்டி அருகே சென்று கொண்டிருந்த போது அருண்குமார் குடும்பத்தினர் கார் முழுவதும் நகை பெட்டியை தேடி உள்ளனர்.

நகைப்பெட்டி மாயமான காரணத்தினால்

திண்டுக்கல் திரும்பிய அவர்கள் இதுகுறித்து திண்டுக்கல் நகர் மேற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர்

இந்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்த மேற்கு காவல் நிலைய போலீசார் அவர்கள் பயணம் செய்த சாலையில் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்த போது காரின் மேற்கூறையில் நகை பெட்டி கீழே விழுவதும்,

அந்த நகை பெட்டியை காவி வேட்டி அணிந்த நபர் ஒருவர் எடுத்துச் சென்றதும் பைபாஸ் சாலையில் உள்ள சிசிடிவி கேமராக்களில் பதிவாகி இருந்தது.

தொடர்ந்து அந்த சாலையில் உள்ள அனைத்து சிசிடிவி கேமராக்களையும் ஆய்வு செய்து விசாரணை நடத்தியதில் நகை பெட்டியை எடுத்துச் சென்றது அதே பகுதியை சேர்ந்த ால் வியாபாரி குழந்தை ராஜ் என்பது தெரிய வந்தது தொடர்ந்து அவரை மடக்கிப் பிடித்த போலீசார் தவறவிட்ட 50 பவுன் நகையில் 20 பவுனை வங்கி ஒன்றில் அடகு வைத்திருப்பதை கண்டறிந்தனர்.

தொடர்ந்து வங்கி மற்றும் அவர் வீட்டில் வைத்திருந்த 50 பவுன் நகையை மீட்டு மாவட்ட எஸ்பி ஜெயக்குமார் மற்றும் டிஎஸ்பி கார்த்திகேயன் தலைமையிலான போலீசார் நீதிமன்ற உத்தரவுப்படி அருண்குமார் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர்.

தமிழகத்தில்

9 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு

வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, செப்.4:

தமிழகத்தில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 9 மாவட்டங்களில் இன்று இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு கடலோரப் பகுதிகளின் கீழ்மட்ட வளிமண்டலத்தில் நிலவும் பலவீனமான காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்யக் கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும், நாளை முதல் மூன்று நாட்களுக்கு மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை தொடரும் என்றும், உள்தமிழக பகுதிகளில் நான்கு நாட்களுக்கு அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட 4 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப்பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை

உயிரியல் காரணிகளை மானிய விலையில் பெற்று

நோய் தாக்குதல்களிலிருந்து பயிர்களை காப்பாற்

திண்டுக்கல்,செப்.4

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. இங்கு உயிரியல் முறையில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்தும் காரணிகளான டிரைக்கோ டெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளூரசன்ஸ், பேசில்லஸ் சப்டிலிஸ், மெட்டாரைசியம் அனிசோ பிலே ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

விவசாய பெருமக்கள் பயிர்களில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த ரசாயன மருந்துகள் உபயோகிப்பதை தவிர்த்து மேற்கண்ட உயிரியல் காரணிகளை பயன்படுத்தி விவசாயிகள் நலம்பெற வேண்டும் எனவும் மேலும் சுற்றுச்சூழல் மாசுபடுவதையும்தவிர்க்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதனடிப்படையில் பூஞ்சாணக் கொல்லியான டிரைகோடெர்மா விரிடி பயிர்களில் ஏற்படும் வேரழுகல், தண்டு அழுகல் மற்றும் வாடல் நோய்களைக் கட்டுப்படுத்த பயன்படுகிறது.

சூடோமோனாஸ் புளூசரன்ஸ் மற்றும் பேசிலஸ் சப்டிலிஸ் எனப்படும் பாக்டீரியல் கொல்லிகள் பயிர்களில் ஏற்படும் நெல் குலைநோய், நெல் இலையுறை அழுகல் நோய், நெல் இலைப் புள்ளி நோய், நாற்றழுகல் நோய், பருத்தி மற்றும் வாழை வாடல் நோய் மற்றும் மா, வாழையில் ஆன்ந்துரு ரக்னோஸ் நோய்களை கட்டுப்படுத்தப் பயன்படுகிறது.

மெட்டா ரைசியம் அனிசோபிலே எனப்படும் பூஞ்சாணக் கொல்லி தென்னையில் காண்டாமிருக வண்டுப் புழு மற்றும் வேர்ப் புழுக்களை கட்டுப் படுத்த பயன்படுகிறது.

மேற்கண்ட உயிரியல் காரணிகள் அனைத்தும் நத்தம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வழங்கப்படுகிறது எனவே விவசாயப் பெருமக்கள் சரியான நேரத்தில் உயிரியல் காரணிகளைப் பெற்றுமுறைப்படி விநியோகிக்குமாறு நத்தம் வட்டார வேளாண்மை உதவி

ஓம்காரா அசெட்ஸ் புனரமைப்பு பிரைவேட். லிமிடெட் OMKARA ASSETS RECONSTRUCTION PRIVATE LIMITED

Regd. **அலுவலகம்:** 9, எம்.பி. நகர், 1வது தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், 641607.Ph எண். 04212221144. **கார்ப்பரேட் அலுவலகம்:** கோஹினூர் சதுக்கம், 47வது தளம், N. C. கேல்கர் மார்க், ஆர். ஜி. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை 400028. தொலைபேசி: 02226544000/9167490977

[இணைப்பு IVA] [விதி 8(6) மற்றும் 9(1)இன் வரம்புரையைப் பார்க்கவும்] | **மின்னணு ஏலத் தேதி: செப்டம்பர் 22, 2026**

அசையாச் சொத்து விற்பனைக்கான மின்னணு ஏல அறிவிப்பு

'நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பாக்கம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு உரிமை அமலாக்கச் சட்டம், 2002' (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) **மற்றும் அதனுடன் இணைந்த 'பாதுகாப்பு உரிமை (அமலாக்க) விதிகள், 2002'ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ், அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏல அறிவிப்பு.**

பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன் பெற்றவர்(கள்) / பிணையாளர்(கள்) / அடமானம் வைத்தவர்(கள்) ஆகியோருக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 'Omkara PS26/202122 Trust'இன் அறங்காவலராகச் செயல்படும் 'Omkara Assets Reconstruction Pvt Ltd.' (OARPL) எனும் நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்ட/பிணையமாக அளிக்கப்பட்ட அசையாச் சொத்து (பாதுகாக்கப்பட்ட சொத்து) கீழே விவரிக்கப்பட்டுள்ளது. OARPL என்பது 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும்; மேலும் இது 'நிதிச் சொத்துகளின் பாதுகாப்பாக்கம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு உரிமை அமலாக்கச் சட்டம், 2002' (SARFAESI சட்டம்)இன் பிரிவு 3ன் கீழ் இந்திய ரிசர்வ் வங்கியிடம் (RBI) 'சொத்து மறுசீரமைப்பு நிறுவனம்' (Asset Reconstruction Company) என முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம், 'Poonawalla Housing Finance Ltd.' (PHFL) (முன்னர் 'Magma Housing Finance Ltd.' என்று அறியப்பட்டது) நிறுவனத்திடமிருந்து, கடன் பெற்றவர்(கள்)/கூட்டுக் கடன் பெற்றவர்(கள்)/அடமானம் வைத்தவர்(கள்) ஆகியோரின் நிலுவைக் கடன் தொகை மற்றும் அதற்கான பிணையங்கள் தொடர்பான அனைத்து உரிமைகள் மற்றும் அதிகாரங்களையும், 30092021 தேதியிட்ட உரிமை மாற்ற ஒப்பந்தத்தின் (Assignment Agreement) மூலம் SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 5ன் கீழ் கையகப்படுத்தியுள்ளது. மேலும், பாதுகாக்கப்பட்ட சொத்தின் (சொத்துகளின்) நேரடி உடைமை (physical possession) பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் (Authorised Officer) எடுக்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெற்றவர்(கள்)/பிணையாளர்(கள்)/அடமானம் வைத்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநருக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, மேற்படி சொத்து(கள்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் "உள்ளபடியே" "இருக்கின்ற நிலையிலேயே" மற்றும் "எது உள்ளதோ அதுவாகவே" (Whatever there is) என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். அடிப்படை விலை, முன்பணம் (EMD) மற்றும் பிற விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன் பெறுபவர் மற்றும் இணைகடன் பெறுபவரின் பெயர்	31.08.2026 அன்று நிலுவையில் உள்ள தொகை	
1. திரு. முருகன், த/பெ திரு. நடராஜன் (கடன் பெறுபவர்) 2. திருமதி. ஹேமலதா, ம/பெ திரு. முருகன் (இணை கடன் பெறுபவர்) 3. மெஸ்ஸர்ஸ் ஸ்ரீ சாய் பாபா சாரீஸ் (இணை கடன் பெறுபவர்)	**31.08.2026 அன்று நிலுவையில் உள்ள தொகை ரூ.76,08,279/ (ரூபாய் எழுபத்தாறு லட்சத்து எட்டாயிரத்து இருநூற்று எழுபத்தொன்பது மட்டும்). இதில், 31.08.2026 நிலவரப்படி, ஒப்பந்தப்படியான வட்டி மற்றும் இதர அபராதக் கட்டணங்கள் உட்பட மொத்தம் ரூ.43,96,225/ மற்றும் ரூ.32,12,054/ ஆகியவை அடங்கும்.**	**கோரிக்கைக்கான தேதி அறிவிப்பு: 10.01.2025** **நேரடி உடைமை பெறும் தேதி: 27.08.2026** **கூடுதல் மதிப்பு: ரூ. 20,000/** **குறைந்தபட்ச ஏல விலை: ரூ. 27,00,000/**
ஆய்வுத் தேதி மற்றும் நேரம்: தேதி: 15092026, நேரம்: பிற்பகல் 1:00 மணி முதல் 2:00 மணி வரை.		**ஏல முன்பணம்: ரூ. 2,70,000/**

சொத்தின் விவரம்: குடியிருப்பு அடுக்குமாடி குடியிருப்பு எண் F2, முதல் தளம், மனை எண் C, சர்வே எண் 498/2, சரவண நகர், பூந்தமல்லி கிராமம், பூந்தமல்லி வட்டம், சென்னை 600056. பரப்பளவு: 700 சதுர அடி.

ஏல முன்பணத்தைச் (EMD) செலுத்துவதற்கும் ஏலப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கும் கடைசித் தேதி: 21092026, மாலை 06:00 மணி வரை.

ஏலத் தேதி மற்றும் நேரம்: தேதி: 22.09.2026, நேரம்: பிற்பகல் 3:00 மணி முதல் 4:00 மணி வரை.

விற்பனை தொடர்பான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு http://omkaraarc.com/auction.php என்ற இணையதளத்தில் உள்ள இணைப்பைப் பார்க்கவும். 1. ஏலமானது OARPLஆல் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரான "M/s. ARCA EMART PVT. Ltd." மூலம் 'ஆன்லைன்' (ONLINE) முறையில் நடத்தப்படும். ஆன்லைன் ஏலப் படிவம், உறுதிமொழிப் பத்திரம் மற்றும் பொது விதிமுறைகள் அடங்கிய மின்ஏல ஆவணங்கள் www.auctionbazaar.com என்ற இணையதளத்தில் கிடைக்கின்றன. விற்பனை ஆதரவு தொலைபேசி எண்/கைபேசி எண்: 8370969696; உதவி மின்னஞ்சல் முகவரி: contact@auctionbazaar.com / support@auctionbazaar.com; தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: திருமதி M. கிரண்மாய் (Mrs. M. Kiranmai), கைபேசி எண்: 7997043999, மின்னஞ்சல்: kiran@auctionbazaar.com. 2. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள், ஏல முன்பணத்தை (EMD) செலுத்திய பிறகு, உள்நுழைவு ஐடி (Login ID) மற்றும் கடவுச்சொல் (Password) உருவாக்குதல், விவரங்களைப் பதிவேற்றுதல், ஏல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல், மின்ஏல செயல்முறை குறித்த பயிற்சி பெறுதல் போன்றவற்றிற்கு உதவி தேவைப்பட்டால், பின்வருவோரைத் தொடர்பு கொள்ளலாம்: ஆதரவு தொலைபேசி எண்/கைபேசி எண்: 8370969696; உதவி மின்னஞ்சல் முகவரி: contact@auctionbazaar.com / support@auctionbazaar.com; தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: திருமதி M. கிரண்மாய், கைபேசி எண்: 7997043999, மின்னஞ்சல்: kiran@auctionbazaar.com. 3. சொத்து தொடர்பான ஏதேனும் கேள்விகள் அல்லது சொத்து விவரங்களைப் பார்வையிட, ஆர்வமுள்ள நபர்கள் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியைத் தொடர்பு கொள்ளலாம்: **திரு. ஷகில் நிபானி , கைபேசி எண்: +91 9167490977, மின்னஞ்சல்:** shakil.nipani@omkaraarc.com அல்லது வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம். 4. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவு மற்றும் தகவலின்படி, மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, எந்தவொரு சொத்தின் மீதும் அறியப்பட்ட சட்டச் சிக்கல்கள் அல்லது சுமைகள் (encumbrances) எதுவும் இல்லை. 5. ஏல விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைத்து ஏலதாரர்களும், மின்ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்துப் புரிந்துகொண்டதாகவும், அவற்றிற்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும் கருதப்படுவார்கள். மேலும், 'தொடர்புடைய தரப்பினருடனான பரிவர்த்தனைகள்' (Related Party Transactions) தொடர்பாக, 'திவால்நிலை மற்றும் நொடிப்புநிலைச் சட்டம், 2016'இன் பிரிவு 29Aவின் நோக்கத்திற்கு இணங்கவே ஏலதாரர்கள் பங்கேற்றுள்ளனர் எனக் கருதப்படும். ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள், 'திவால்நிலை மற்றும் நொடிப்புநிலைச் சட்டம், 2016'இன் பிரிவு 29Aவின் விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும் என்பதோடு, தங்கள் ஏல விண்ணப்பத்துடன் அதற்கான உறுதிமொழியையும் அளிக்க வேண்டும்; அவ்வாறு செய்யத் தவறினால், செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும்.

பிணைய உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதிகள் 8(6) மற்றும் 9(1)ன் கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு.

'பிணைய உரிமை (அமலாக்க) விதிகள், 2002'ன் விதிகள் 8(6) மற்றும் 9(1) மற்றும் 'நிதிச் சொத்துகளின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய உரிமை அமலாக்கச் சட்டம், 2002'ன் விதிகளின் கீழ், மேற்கூறிய கடன் கணக்கின் கடன் பெற்றவர்(கள்) / இணைகடன் பெற்றவர்(கள்) / அடமானம் வைத்தவர்(கள்) ஆகியோருக்கு இது பதினைந்து (15) நாட்கள் கால அவகாசம் கொண்ட கட்டாய அறிவிப்பாகும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறவுள்ளது என்பது அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது; மேலும், அவர்கள் விரும்பினால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையுடன் அதற்கான செலவுகள் மற்றும் கட்டணங்களையும் செலுத்திச் சொத்துக்களை மீட்டுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். பணம் செலுத்துவதில் தவறும் பட்சத்தில், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / பிணையம் பெற்ற கடன் வழங்குநரின் விருப்பத்திற்கேற்ப, 'பிணைய உரிமை (அமலாக்க) விதிகள், 2002'ன் விதி 8(5)ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு முறையின் மூலம் சொத்து விற்பனை செய்யப்படும்.

இடம்: சென்னை
தேதி: 04.09.2026

S/d, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா PS26/202122 அறக்கட்டளையின் அறங்காவலராகச் செயல்படுகிறது)

மின்னணு ஏல அறிவிப்பு

தீயினால் பாதிக்கப்பட்ட கட்டிடம், இயந்திரங்கள் மற்றும் சரக்குகள் போன்றவை.

"தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கட்டிடம், இயந்திரங்கள் மற்றும் சரக்குகள்" ஆகியவற்றை "அளவீட்டு அலகின் அடிப்படையில்" (Per UOM Basis) விற்பனை செய்வதற்கான மின்னணு ஏலத்தில் (eAuction) பங்கேற்க ஆர்வமுள்ள வாங்குநர்கள் அழைக்கப்படுகிறார்கள். **M/s. Ameva Textile** நிறுவனத்திற்குச் சொந்தமான இந்தச் சரக்குகள், "உள்ளபடியே" , "அங்குள்ளபடியே" மற்றும் "எந்தப் புகாரும் இன்றி" ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இச்சரக்குகளைத் தமிழ்நாட்டின் காங்கேயம், ஓலப்பாளையம், பச்சாபாளையம் கிராமம், தண்ணீர் பந்தல் வளசு **(D.No. 11/122, SF No. 1489/1)** என்ற முகவரியில், 040926 முதல் 150926 வரையிலான காலப்பகுதியில், வேலை நாட்களில் மட்டும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நேரில் சென்று பார்வையிடலாம். பார்வையிடுவது தொடர்பாகத் திரு. பூபதி அவர்களை 9487770851 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மின்னணு ஏலம் 16.09.26 அன்று நடைபெறும்.

மின்னணு ஏலத்திற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய படிவத்தைப் பெற, **திரு. அதுல் ஹலார்ன்கர் அவர்களை 77381 64069** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது **https://www.sealthedeal.co.in/** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும்.

ஏலதாரர்கள்: ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துபவர்கள்
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:
5வது தளம், அலுவலக எண் 2, கிங்ஸ் மால்,
டிஸ்ட்ரிக்ட் சென்டர், ரோஹினி செக்டார் 10,
டெல்லி110085.

படிவம் மற்றும் EMD டிமாண்ட் டிராஃப்ட் (DD) ஆகியவற்றைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 15.09.26 ஆகும்.

NEOGROWTH Lending simplified. Growth amplified.

நியோகிரோத் கிரெடிட் பிரைவேட் லிமிடெட்

எளிமையான கடன் வசதி. துரிதமான வளர்ச்சி. டைம்ஸ் ஸ்கொயர், டவர் E, 9வது தளம், அந்தேரி குர்லா சாலை, மரோல், அந்தேரி கிழக்கு 400059; தொலைபேசி: 91 22 4921 9999
www.neogrowth.in; CIN: U51504MH1993PTC251544

கைவசப்படுத்தல் அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)

(பாதுகாப்பு உரிமை அமலாக்க விதிகள், 2002ன் விதி 8(1)உடன் இணைத்து வாசிக்கப்படும் இணைப்பு IVன் படி)

நிதிச் சொத்துகளின் பாதுகாப்பாக்கம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு உரிமை அமலாக்கச் சட்டம், 2002ன் கீழ், NeoGrowth Credit Private Limitedன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகவும், பாதுகாப்பு உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 3உடன் இணைத்து வாசிக்கப்படும் பிரிவு 13(2)ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துபவராகவும் உள்ள நான் ஹேமா டெக்ஸ் (வணிகர்), ஹல்லன் சுசி (கடன் பெற்றவர்/உரிமையாளர்/அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்) மற்றும் சந்திரன் சந்திரமோகன் (இணை விண்ணப்பதாரர்/உரிமையாளர்/அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்) ஆகியோருக்கு 05.12.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு ஒன்றை வெளியிட்டேன். அவ்வறிவிப்பின்படி, **கடன் கணக்கு எண்கள் 1300523 மற்றும் 1313446 ஆகியவற்றின் கீழ், 05.12.2025 அன்று நிலுவையில் உள்ள ரூ. 70,26,439.16/ (ரூபாய் எழுபது லட்சத்து இருபத்தாறாயிரத்து நானூற்று முப்பத்தொன்பது மற்றும் பதினாறு பைசா மட்டும்)** தொகையை, வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து, மேற்படி அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

கடன் பெற்றவர் அத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதைத் தொடர்ந்து, கடன் பெற்றவருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இம்முலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கோயம்புத்தூர் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் Cr.M.P. எண் 3006/2026ல் பிறப்பிக்கப்பட்ட 22.04.2026 தேதியிட்ட உத்தரவின் அடிப்படையில், நீதிமன்ற ஆணையர் திரு. S. செந்தில்குமார் (MS. எண் 1193/2016) மூலம், இங்கு விவரிக்கப்பட்டுள்ள சொத்து கையகப்படுத்தப்பட்டு, அதன் நேரடி உடைமை இன்று (31.08.2026) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிணையமாக வைக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான கால அவகாசம் குறித்து, இச்சட்டத்தின் பிரிவு 13ன் உட்பிரிவு (8)ல் உள்ள விதிமுறைகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன் பெற்றவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கடன் பெற்றவர் மற்றும் பொதுமக்கள் இச்சொத்து தொடர்பாக எந்தவிதமான பரிவர்த்தனைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள்; அவ்வாறு செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும் 'NeoGrowth Credit Private Limited' நிறுவனத்தின் உரிமைக்கோரலுக்கு (charge) உட்பட்டதாக இருக்கும். **கடன் கணக்கு எண்கள் 1300523 மற்றும் 1313446 ஆகியவற்றின் கீழ், 05.12.2025 முதல் வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து, ரூ. 70,26,439.16/ (ரூபாய் எழுபது லட்சத்து இருபத்தாறாயிரத்து நானூற்று முப்பத்தொன்பது மற்றும் பதினாறு பைசா மட்டும்)** செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அசையாச் சொத்தின் விவரம்

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் (தற்போது கோயம்புத்தூர் வடக்கு பதிவு மாவட்டம்), பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், எண் 20 துடியலூர் கிராமம், S.F.எண் 267ல் உள்ள ஏக்கர் 5.53 நிலப்பரப்பில், வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்ட ஏக்கர் 2.05 நிலத்தில் அமைந்துள்ள மனை எண் 2Aக்கான எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: வடக்கு: S.F.எண் 268/Aன் ஒரு பகுதி, கிழக்கு: மனை எண் 2, தெற்கு: 23 அடி அகலமுள்ள சாலை, மேற்கு: மனை எண் 3. மேற்படி மனைக்கான அளவுகள்: வடக்கு பக்கம் கிழக்குமேற்காக 32 அடி, கிழக்கு பக்கம் தெற்குவடக்காக 45 அடி, தெற்கு பக்கம் கிழக்குமேற்காக 32 அடி, மேற்கு பக்கம் தெற்கு வடக்காக 45 அடி. இந்த 1440 சதுர அடி (அல்லது 0.03 ஏக்கர் / 133 சதுர மீட்டர்) நிலம் மற்றும் அதில் உள்ள கட்டிடத்துடன், துடியலூர் பேரூராட்சி எல்லைக்குள், புதிய S.F.எண் 267/2ல் (உட்பிரிவு பட்டா எண் 935ன்படி) அமைந்துள்ள மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொதுவான சாலைகளைப் பயன்படுத்தும் உரிமைகளும் இதில் அடங்கும். முகவரி: துடியலூர் கிராமம், கோயம்புத்தூர் 641017, தமிழ்நாடு.

தேதி: 04.09.2026,
இடம்: கோயம்புத்தூர், தமிழ்நாடு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
மெஸ்ஸர்ஸ் நியோகிரோத் கிரெடிட் பிரைவேட் லிமிடெட்

நேரடி உடைமை அறிவிப்பு

ICICI Home Finance | பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்: ICICI வங்கி டவர்ஸ், பாந்த்ராகுர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை400051 கார்ப்பரேட் அலுவலகம்: ICICI HFC டவர், JB நகர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை400059 கிளை அலுவலகம்: 2வது தளம், AB106, பழைய எண்: 134, 4வது அவென்யூ, சாந்தி காலனி, அண்ணாநகர், சென்னை600040

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில்,

'நிதிச் சொத்துகளின் பாதுகாப்பாக்கம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு உரிமை அமலாக்கச் சட்டம், 2002'ன் (Securitisation, Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) கீழ் ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகச் செயல்படும் நான், பிரிவு 13(12) மற்றும் 'பாதுகாப்பு உரிமை அமலாக்க விதிகள், 2002'ன் விதி 3 ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெற்றவர்களுக்குக் கோரிக்கை அறிவிப்புகளை (demand notices) வெளியிட்டேன். அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு அதில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

கடன் பெற்றவர் அத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் மேற்படி விதிகளின் விதி 8 ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை நான் எனது கட்டுப்பாட்டில் (கைப்பற்றுதல்) எடுத்துள்ளேன் என்பதை கடன் பெற்றவருக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். கடன் பெற்றவர் மற்றும் பொதுமக்கள் இச்சொத்து தொடர்பாக எந்தவொரு பரிவர்த்தனையிலும் ஈடுபட வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள்; அத்தகைய பரிவர்த்தனைகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டால், அவை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் உரிமைக்கு உட்பட்டதாகவே இருக்கும்.

பிணையமாக அளிக்கப்பட்ட சொத்துகளை மீட்பதற்குக் கிடைக்கும் கால அவகாசம் குறித்து, இச்சட்டத்தின் பிரிவு 13ன் உட்பிரிவு (8)ல் உள்ள விதிமுறைகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன் பெற்றவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

Sr. No.	கடன் பெறுபவர்/ இணை கடன் பெறுபவர் பெயர் / கடன் கணக்கு எண்	சொத்தின் விவரம்/கைவசப்படுத்தும் தேதி	கோரிக்கை அறிவிப்புத் தேதி / கோரிக்கை அறிவிப்பில் உள்ள தொகை (ரூ.)	கிளையின் பெயர்
1.	I. ராகுல் நாதன் (கடன் பெறுபவர்), கனகராணி இளங்கோ (இணைகடன் பெறுபவர்), LHANC00001456655.	11 கணத்தூர் ரெட்டி குப்பம் கிராமம், சன்ரைஸ் அவென்யூ, கணத்தூர் ரெட்டி குப்பம், 97/2A3, 97/2A3A, 97/2A3B, சென்னை, தமிழ்நாடு 631551. எல்லைகள் வடக்கு: மனை எண்கள் 28 & 29, தெற்கு: மனை எண் 37, கிழக்கு: 20 அடி அகலமுள்ள தனியார் சாலை, மேற்கு: மனை எண் 31. / உடைமை பெறும் தேதி 31082026.	12.06.2024 ரூ. 81,90,938/	சென்னை - அண்ணா நகர்

மேலே குறிப்பிடப்பட்ட கடன் பெறுபவர்(கள்)/பிணையாளர்(கள்) அத்தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு இதன் மூலம் 30 நாட்கள் கால அவகாசம் கொண்ட அறிவிப்பு வழங்கப்படுகிறது; தவறும்பட்சத்தில், 'பிணைய உரிமை (அமலாக்க) விதிகள் 2002'இன் விதி 8 மற்றும் 9இல் உள்ள விதிகளின்படி, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்கள் முடிந்ததும் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் விற்பனை செய்யப்படும்.

தேதி: 04 செப்டம்பர் 2026,இடம்: சென்னை

அதிகாரம் பெற்ற அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்